DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.9/2025**

Prosecution **PW.3**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | பெருமாள் | கிராமம் : | |
| கணவர் பெயர் : | கருப்புரெட்டியார் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 67 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2025

2ம் எதிரி ஆஜரில்லை. சட்டப்பிரிவு 355 BNSS படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர். 1ம் எதிரிக்கு எதிராக வழக்கு தனியாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், சேங்கல் கிராமம், மேலப்பண்ணைக்களத்தில் வசித்து வசிக்கிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் ஞாபகமில்லை. சுமார் ஒரு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நானும், மருதை என்பவரும் இருசக்கர வாகனத்தில் கரூருக்கு சென்றோம். மலைப்பட்டி அருகில் மாயனூர் போலிசார் இருசக்கர வாகனத்தை சோதனை செய்தார்கள்.

2. எங்களை சோதனை செய்த போது காலை 11.00–12.00 மணியிருக்கும். எங்களுக்கு பின்னால் இருந்து யமகா இருசக்கர வாகனத்தில் 30 வயதிற்குள்ள இரு நபர்கள் வந்ததார்கள். அவர்கள் போலிஸ் பார்த்து தப்பிப்பதற்காக வண்டியை திருப்பி சென்றார்கள். மாயனூர் இன்ஸ்பெக்டர் அந்த இருநபர்களையும்மடக்கி பிடித்து விசாரித்தார்கள். அந்த இரு நபர்களும் மூக்குத்தி, மாங்கல்யம், தோடு போலிசாரிடம் கொடுத்து அவர்கள் தான் பண்ணியதாக ஒப்புக்கொண்டார்கள்.

3. போலிசார் அவர்களை மாயனூா காவல் நிலையம் கூட்டிச்சென்று விசாரித்ததார்கள் அவர்கள் தான் செய்ததாக ஒப்புக்கொண்டார்கள். அந்த இரு

நபர்களையும் தற்போது பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியுமா என்றால் ஒரு வருடத்திற்கு மேல் ஆகிறது சரியாகத் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான் மேலும் என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் 2 வது சாட்சிகையொப்பம் என்னுடையதுதான்.

4. (**ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (கைப்பற்றுதல் மகசரில் 2வது சாட்சிகையொப்பம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

5. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடன் வந்த சுப்புராமன் என்பவருடையது தான். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 புகைப்படத்தில் உள்ள நகைகள் தான் இருசக்கர வாகனத்தில் வந்த இருநபர்களும் போலிசாரிடம் கொடுத்த நகைகள் ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான், சீதாராமன், சுப்புராமன் ஆகீயோர்கள் உறவினர்கள் என்றால் ஒரே ஊரில் உள்ளோம் ஆமாம். நானும் சுப்புராமன், சீதாராமன், மருதை ராஜேந்திரன் ஆகீயோர்கள் காவல் நிலையம் சென்று தான் கையொப்பம் செய்தோம் என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு எத்தனை பேர் சென்றோம் என்றால் 6 பேர் சென்றோம். போலிசார் வரச்சொல்லியதால் காவல் நிலையம் சென்றோம் என்றால் சரிதான்.

2. போலிசார் கையெழுத்து போடச்சொன்னார்கள் என்றால் விசாரித்தார்கள். என்னை விசாரித்தால் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். சீதாராமன் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. போலிசார் பிடித்த இடத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடன் வந்தவர்களும் அந்த இடத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் எதிரியிடமிருந்து எந்த நகையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. எந்த ஒப்புதல் வாக்குமூலமும்

கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஓம்/–திரு.ஆர்.பாக்கியராஜ்**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.